# ஒடுக்கப்படும் மக்களுக்கான தளம்

முள்ளிவாய்க்கால் பேரவலம் தமிழ் மக்களின் பெரும் காயமாக தொடர்ந்து இருந்து வருகிறது..

இறந்த மக்களை நினைவு கூறும் அதே வேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என நாம் போராட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவு வெறும் நினைவுகூறலாக இருக்காமல் மக்களின் எழுச்சி நாளாகவும் இருக்க வேண்டும். வெறும் கொலைகளால் எம்மை முடக்கி விட முடியாது என்ற செய்தியை பதியும் நாளாக இது இருக்க வேண்டும். அழிவில் இருந்து மீண்டு எழும் திரட்சியை நாம் பதிய வேண்டும்.

இன்று மக்கள் முன் வைக்கும் கோரிக்கைகள் சில -

- அபகரிக்கப் பட்ட நிலங்களை திருப்பி வழங்கு.
- காணாமற் போனவர்கள் விபரங்களைத் தெரிவி
- அரசியற் கைதிகளை விடுதலை செய்
- சுய நிர்ணய உரிமையை அங்கீகரி

மேலும் போர் குற்ற விசாரணை நடத்த வேண்டும் முதற்கொண்டு பல சனநாயக உரிமைகளைக் கோரி மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இது மட்டுமின்றி வேலை இல்லாமை கடன் சுமை நீக்கம் பற்றியும் மக்கள் அதிருப்தி கொடுள்ளனர். மிகவும் பின் தங்கிய பிரதேசமாக ஆக்கப் பட்டுள்ள தமிழ் மக்கள் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பொருளாதார மேம்பாட்டை அடைவது எப்படி என்பது முக்கிய கேள்வியாக இருந்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் அழிவுக்குப் பின் தமிழ் அரசியற் தலைமைகள் என தம்மைத் தாமே சொல்லிக் கொள்பவர்கள் யாரும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க முன் வரவில்லை. இதனால் மக்களே தங்களின் உரிமைகளுக்கான போரட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். சிங்கள

பேரினவாத அரச அடக்குமுறைக்கு உள்ளாகும் மக்களின் பலம் -தமிழ் அரசியற் தலைமைகளின் சுயநலத் தேர்தல் அரசியல் மற்றும் குழுவாத போக்குகளால் -மேலும் பலவீனம் அடைந்துள்ளது. இதை மாற்றி அமைக்க வேண்டும். மக்களின் அரசியற் பலத்தை மேம்படுத்த வேண்டும்

# தீர்வு எங்கிருந்து வரும்

## இலங்கை அரசு ?

தெற்கில் அரச அதிகாரம் எந்தக் கட்சியின் கையில் இருந்தாலும் இவற்றுக்கான தீர்வு கிட்டப் போவதில்லை.

## இந்திய அரசு அல்லது மேற்குலக நாடுகள் ?

ஐக்கிய நாடுகள் சபை - மேற்குலக நாடுகள் அல்லது இந்தியா ஆகிய சக்திகள் இலங்கை அரசியலில் தலையிடுவது மக்களின் நலனுக்காக அல்ல. அவர்கள் தமது சொந்த லாப நோக்குடன் மட்டுமே தலையிடுகிறார்கள். இலங்கை அரசை மீறி ஒரு தீர்வு வழங்கும் நிலைக்கு அவர்கள் ஒருபோதும் நகரப் போவதில்லை.

இந்த உண்மையை மறைத்து சில தமிழ் அமைப்புக்களும் மக்கள் மத்தியில் பிரச்சாரித்து வருவது தவறு. அது மக்களை ஏமாற்றும் நடவடிக்கை. வேறு ஒரு சக்தியால் மக்களுக்கு தீர்வு என்று வாதிட்டவர்கள் கடந்த பத்து வருட காலமாக என்ன சாதித்துள்ளனர் என சொல்லவேண்டும். மக்களின் வாழ்வாதாரம் மேலும் மேலும் குறைந்து செல்வது மட்டுமே நிகழ்து வருகிறது. ஐ.நா வுக்குளால் தீர்வு போன்ற பொய் கதைகளுக்கு எதிரான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும்.

பல்வேறு ஏன் ஜி ஓ அமைப்புக்கள் சில உதவிகளை வழங்கி உள்ளன என்பது உண்மையே. மக்கள் இனாமாக வழங்கிய பணத்தில் ஒரு பகுதியை இவர்கள் உதவிகள் வழங்க உபயோகித்து உள்ளனர். இருப்பினும் இது போதாது - இது ஒரு தற்காலிக உதவி மட்டுமே. மக்கள் கை ஏந்தும் வாழ்க்கைய எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்து வாழ்வது? இது தவிர சுய முன்னேற்றம் என்ற பெயரில் மோசமான கடன் திட்டங்களை வழங்கி மக்களை கடன் சுமைக்குள் சிக்க வைத்துள்ளன சில அமைப்புக்கள். மக்களிடம் மிஞ்சி இருக்கும் வளங்களையும் பறிக்கும் முகமாக இந்த கடன் வழங்கும் திட்டங்கள் செயற்படுகின்றன. இது பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். ஒரு மிகச் சிறுபான்மை மட்டுமே வியாபரத் திட்டத்தால் பயனடைய முடியும். எல்லா மக்களும் பயனடையும் பொருளாதார திட்டம் வேண்டும். இலங்கை அரசு மற்றும் மாகான அரசு இது பற்றிய கொள்கைகளை முன்னெடுக்கும் படி நாம் போராட வேண்டும்.

**நாம் யார்?**
சனநாயக உரிமைகளை வென்றெடுத்தலுடன் எமது சுய நிர்ணய உரிமையை நிலைநாட்ட நாம் ஒன்று திரளுதல் அவசியம். இந்த அடிப்படையில் இணைந்து ஒரு அமைப்பாக நாம் இயங்கி வருகிறோம். நாம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்ட சக்தியை திரட்ட செயற்பட்டு வருகிறோம்.



# இந்நிலையில் மக்கள் என்ன செய்ய முடியும்?

எல்லா விதத்திலும் அதிகாரமற்று - பலவீனமான குழுவாக நிற்பதாக உணரும் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க - பொருளாதார முனேற்றம் அடைய- என்ன செய்துவிட முடியும்.

நாம் எமது அதிகாரத்தை கட்டி நிமிர்த்தாமல் - நாம் எமது பலத்தை திரட்டாமல் எந்த வெற்றியையும் அடைந்து விட முடியாது. எந்த சக்திகளையும் எமது கோரிக்கைக்கு செவி மடுக்கச் செய்து விட முடியாது. நாம் எமது பலத்தை திரட்டுவது என்பது என்ன என சிந்திக்க வேண்டும். குறிப்பிட்ட மக்கள் விரோத கொள்கை உள்ள (வலதுசாரிய) கட்சிகள் பின்னால் திரள்வதால் எமது பலத்தை நாம் கட்டி விட முடியாது. மக்களின் கோரிக்கைக்களை முதன்மைப்படுத்தும் - மக்களின் நலன்களை முதன்மையாக வைத்து இயங்கும் - சனநாயக அமைப்பு ஒன்று அவசியம். அத்தகைய அமைப்பாக மக்கள் திரளாமல் எமது பலத்தை நாம் நிறுவிக் காட்ட முடியாது.

ஒடுக்கப்படும் மக்களுக்கான தளம்
தொடர்புகளுக்கு:
0756761830
propthayakam@gmail.com